www.Padasalai.Net www.TrbTnpsc.com

TVM

**10** - ஆம் வகுப்பு

காலம் : 3.00 மணி

# முதல் திருப்புதல் தேர்வு - 2025
## தமிழ்

மதிப்பெண்கள் : 100

**பகுதி - I (மதிப்பெண்கள் : 15)**

**சரியான விடையை தேர்வு செய்க:-** 15 X 1 = 15

1. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் - இத்தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் முறையே
அ) பாடிய : கேட்டவர் ஆ) பாடல் : பாடிய இ) கேட்டவர் : பாடிய ஈ) பாடல் : கேட்டவர்

2. பெரியமீசை சிரித்தார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத் தொகை

3. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் குறிப்பன
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

4. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி - என்னும் அடியில் பாக்கம் என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

5. பரிபாடல் அடியில் விசும்பும் இசையும் என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும், பாட்டையும் ஆ) வானத்தையும், புகழையும்
இ) வானத்தையும், பூமியையும் ஈ) வானத்தையும், பேரொலியையும்

6. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச்சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேடு உணர்த்துவது
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது ஆ) காப்பிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

7. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) இலா இ) கலா ஈ) குலா

8. அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும் - பாடல்வரி இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) புறநானூறு ஆ) நற்றிணை இ) குறுந்தொகை ஈ) அகநானூறு

9. கலைஞரின் கதை வசனங்களில் பெண்கள் முன்னேற்றம் பற்றிய பேசியபடம்
அ) பராசக்தி ஆ) அரசிளங்குமாரி இ) பாசப்பறவைகள் ஈ) மருதநாட்டு இளவரசி

10. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு
அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா இ) இந்தியா ஈ) இலங்கை

11. 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலை இந்தி மொழியில் எழுதியவர்
அ) என். ஸ்ரீதர் ஆ) கணமுகத்தையா இ) ராகுல் சாங்கிருத்யாயன் ஈ) யூமா வாசுகி

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல
பாடு இமிழ் பனிக்கடல் பருகி வலன் ஏர்பு
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி"



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் யாது?
அ) சிலப்பதிகாரம் ஆ) காசிக்காண்டம் இ) நற்றிணை ஈ) முல்லைப்பாட்டு

13. 'நனந்தலை உலகம்' என்ற சொல்லின் பொருள்
அ) சிறிய உலகம் ஆ) குளிர்ந்த உலகம் இ) அகன்ற உலகம் ஈ) வெப்பமான உலகம்

14. 'தடக்கை' - என்பதன் இலக்கண குறிப்பு
அ) உரிச்சொல் தொடர் ஆ) பண்புத்தொகை இ) வினைத்தொகை ஈ) வேற்றுமைத் தொடர்

15. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) தமிழழகனார் ஆ) நப்பூதனார் இ) கீரந்தையார் ஈ) இளங்கோவடிகள்

## பகுதி - II பிரிவு - I (மதிப்பெண்கள் : 18)

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்:-**

16. வசனக்கவிதை - குறிப்பு வரைக. 4 X 2 = 8

17. **விடைக்கேற்ற வினா அமைக்க.**
அ) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மலர்வது குறிஞ்சி.
ஆ) பாரதியார் நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்றார்.

18. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

19. குற்றம் இல்லாமல் தன்குடிப் பெருமையை உயரச் செய்யும் கருத்தினைக் கொண்ட திருக்குறளை எழுதுக.

20. ஊர்தி ஒட்டுநருக்கான நெறிகள் இரண்டினை எழுதுக.

21. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை கூறுக.

Padasalai

## பிரிவு - II

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:-** 5 X 2 = 10

22. இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க. அ) கொடு - கோடு ஆ) இயற்கை - செயற்கை

23. ***கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளை திருத்தி எழுதுக.***
அ) உழவர்கள் மலையில் உழுதனர்
ஆ) முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாரே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

24. 'மலைந்து' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. கலைச்சொல் தருக. அ) Nanotechnology - ஆ) Guild -

26. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

27. ***உவமையைப் பயன்படுத்தி சொற்றொடர் அமைக்க.***
அ) தாமரை இலை நீர் போல ஆ) மழை முகம் காணா பயிர் போல

28. ***எதிர்மறையாக மாற்றுக.***
அ) கொடுத்து சிவந்த ஆ) எழுதாக் கவிதை

## பகுதி - III பிரிவு - 1 (மதிப்பெண்கள் : 18)

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:-** 2 X 3 = 6

29. சங்க இலக்கிய அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

30. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' இடம் சுட்டி பொருள் விளக்குக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

31. **பத்தியைப் படித்து விடை எழுதுக.**

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர், ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும், என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

அ) போர் அறம் என்பது எதைக் குறிக்கிறது?

ஆ) யாரோடு போர் செய்வது கூடாது என்று ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்?

ஆ) எவ்வாறு போர் புரிய வேண்டும்?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. (34 - வது கட்டாய வினா) :-** 2 X 3 = 6

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

34. **அடிபிறழாமல் எழுதுக.**

அ) "வாளால் அறுத்துச் சுடினும்" - எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடல்.

**(அல்லது)**

ஆ) "நவமணி வடக்க யில்" - எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:-** 2 X 3 = 6

35. நிரல் நிரை அணியை விளக்குக.

36. தொழுதகை யுள்ளும் படையொடுக்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து - ***இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.***

37. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-** 5 X 5 = 25

38. அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. **(அல்லது)**

ஆ) உங்கள் பகுதியில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றவும், புதை சாக்கடையைத் தூர் வாரவும் வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

39. அ) தமிழர் மருத்துவ முறைக்கும், நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து விவரித்து எழுதுக.


**(அல்லது)**

ஆ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் கீழ்க்காணும் குறிப்பினைக் கொண்டு உங்கள் இலக்கிய உரையைத் தொடர்க.

குறிப்பு : அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்தப் பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கைக் காட்சியைப் பெரிய கலை நிகழ்வாகவே காட்டும் கம்பனின் கவி நயம் ........ .



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com



40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

41. எண் - 6, பாரதி தெரு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் பூங்கொடி, கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன் விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர் தன்னை பூங்கொடியாகப் பாவித்து பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புக.

42. அ) பள்ளியிலும், வீட்டிலும் நீ கடைபிடிக்கக் கூடிய நற்பண்புகளைப் பட்டியலிடுக.

**ஆ) மொழி பெயர்க்கவும்.**

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artistis. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artistis on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a Koothu troipe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy popular among rurul areas.

## பகுதி - V (மதிப்பெண்கள் - 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3 x 8 = 24

43. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் `கதைப்பகுதி கொண்டு விவரிக்க. ***(அல்லது)***

ஆ) இராமானுசர் நாடகம் வெளிப்படுத்தும் மனித நேயத்தினைச் சுவைபட விளக்கி எழுதுக.

44. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும், கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கரை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

***(அல்லது)***

ஆ) கருணையன் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும், உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

45. அ) "விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்" - என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

***(அல்லது)***

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி `சாலை பாதுகாப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை - சாலை விதிகளை அறிவோம் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துக்கான காரணங்கள் - தேவையான விழிப்புணர்வு - நம் கடமை - முடிவுரை.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com